//தனி கவனம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண் 3761 /ஆ4/2023 நாள் 05.09. 2023**

**பொருள் :** தேர்வுகள்– தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு அக்டோபர் 2023 –தொடர்பான சென்னை அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் செய்திக்குறிப்பு –பள்ளிகளுக்கு தெரிவித்தல் –சார்பு

**பார்வை :** சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செய்திக்குறிப்பு நாள்.04.09.2023

*********

தமிழ் மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு நடத்தப்படுகிறது .2023–2024 ஆம் ஆண்டிற்கான தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு 15.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடத்தப்படவுள்ளது. இத்தேர்வில் தெரிவு செய்யப்படும் மாணவ, மாணவிகளுக்கு பள்ளிக்கல்வித்துறை வழியாக மாதம் ரூ.1500/– வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இத்தேர்வில் 50 விழுக்காடு அரசுப் பள்ளி மானவர்களும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற பள்ளி மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

தமிழ்நாடு அரசின் பத்தாம் வகுப்பு நிலையான பாடத்திட்ட அடிப்படையில் கொள்குறி வகையில் தேர்வு நடத்தப்படும். 2023 –2024–ம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும்(அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட)பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் விண்ணப்பங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் 05.09.2023 முதல் 20.09.2023 வரை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணத்தொகை ரூ.50/– சேர்த்து சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரிடம் /முதல்வரிடம் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டிய கடைசி நாள். 20.09.2023

| தமிழ்நாடு மொழி இலக்கியத் திறனறித் தேர்வு 2023–2024 | |
|---|---|
| மாணவர்கள் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யும் தேதி | 05.09.2023 to 20.09.2023 |
| மாணவர்கள் விண்ணப்பங்களை பள்ளித்தலைமை ஆசிரியரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 20.09.2023 |
| தேர்வுக்கட்டணம் | ரூ–/50. |
| தேர்வு நாள் | 15.10.2023(ஞாயிற்றுக்கிழமை( |

இணைப்பு:
1. செய்திக்குறிப்பு
2. படிவம்

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட)மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல் :
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார்)அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர்நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.